Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 341

வெள்ளிக்கிழமை
01 நவம்பர் 2024

ஐப்பசி 15
வள்ளுவர் ஆண்டு 2055

பக்கங்கள் – 16 | விலை – ரூபா 50







## ஐரோப்பா அனுப்புவதாக மோசடி செய்தவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 1
ருமேனியா ஊடாக வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாகக்கூறி பெருந்தொகை மோசடியில் ஈடு பட்ட நபர் யாழ்ப்பாணம் விசேட குற்றவிசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட் 15



## நிலையற்ற கொள்கையால் தடுமாறுகின்றது இலங்கை!

### சர்வதேச உறவுகள் விரிசலாகும் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டு

கொழும்பு, நவம்பர் 1
நிலையற்ற வெளிவிவகாரக் கொள்கைகளால், அநுர அரசாங்கம் தடுமாறி வருகின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். 15

## கற்கோவளா இரட்டைக்கொலை; மூன்றாவது சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், நவ. 1
வடமராட்சி – பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற் கோவளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரட் டைக் கொலைகளுடன் தொடர்புடைய மூன்றாவது சந்தேக நபரும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். 15

முச்சந்தி முராரி



"இப்பிடி மாறி மாறி படிப்பிச்சுக் கொண்டிருக்கவோ உவை ஆட்சிக்கு வந்தவை?"



சந்திரிகாவின் கணவர்

## விஜயகுமாரதுங்க கொலை: ஜே.வி.பி.க்குத் தொடர்பு!

### முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கண வரான விஜயகுமாரதுங்க கொலையில் ஜே.வி.பி.க்குத் தொடர்புண்டு என்று முன் னாள் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு வழங்கப்பட்ட 15

## 17 தடவை தோற்ற ரணிலுக்கு எனக்கு கற்பிக்க என்ன தகுதி?

### பிரதமர் ஹரிணி பதிலடி

கொழும்பு, நவ. 1
17 தடவைகள் பொதுமக்களால் தோற்கடிக்கப்பட்ட முன் னாள் ஜனாதிபதி ரணில், அரசமைப்புத் தொடர்பில் எனக் குக் கற்பிக்க உரிமையுள்ளதா? என்று பிரதமர் ஹரிணி கேள்வி எழுப்பியுள்ளார். 15

## முறைப்பாடு 1,136

கொழும்பு, நவ. 1
பொதுத் தேர்தல் தொடர் பில் இதுவரை (செப்ரெம் பர் மாதம் 26ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி வரை) ஆயிரத்து 136 முறைப் பாடுகள் கிடைக்கப் பெற் றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது. (அ-ம)

## வயாவிளான் வீதி இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 1
வயாவிளான் மத்திய கல்லூரியூ டாக அச்சுவேலி நோக்கிச் செல் கின்ற சுமார் 2 கிலோமீற்றர்கள் தூரம்கொண்ட வீதி நீண்டகாலத் தடைக்குப் பின்னர் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.
இராணுவ முகாமுக்கு 15

## காற்றுச் சுழற்சி உருவாக வாய்ப்பு!

யாழ்ப்பாணம், நவ. 1
இலங்கைக்குக் கிழக்காக, வங்காள விரிகுடாவில் காற்றுச் சுழற்சியொன்று உருவாகும் சாத்தியம் உள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியி யல்துறையின் தலைவரும், வானிலையாளரு மான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:- 15

இந்திய – இலங்கை மீனவர்கள் விவகாரம்

## பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக்கொள்ள இணக்கம்

கொழும்பு, நவ. 1
இந்திய – இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்சி னைகளைச் சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்வது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி 15




92 ஒக்ரேன்

## பெற்றோல் விலை மாற்றம் இல்லை!

கொழும்பு, நவ. 1
எரிபொருள்களின் மாதாந்த விலைத் திருத்தங்கள் நேற்று நடைமுறைக்கு வந்துள்ளன. 92 ஒக்ரேன் பெற்றோலின் விலையில் மாற்றம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## கிளிநொச்சி மக்களுடன் ஆளுநர் இன்று சந்திப்பு

கிளிநொச்சி, நவ. 1
வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் இன்று காலை கிளிநொச்சியைச் சேர்ந்த பொதுமக் களுடன் சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார்.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இந்த மக்கள் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ-ம-26)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தாராள பிரபுவான ரணில்

கொழும்பு, நவ.1

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் எனக்கான சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களை வேண்டுமானால் முழுமையாக நீங்கிக் கொள்ளுங்கள். ஆனால் ஏனையோருக்குரிய பாதுகாப்பை வழங்குங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை வலியுறுத்தியுள்ளார் ரணில் விக்கிரம சிங்க.

முன்னாள் ஜனாதிபதிகளை உத்தியோகப்பூர்வ இல்லங்களில் இருந்து வெளியேற்றுவதற்குரிய அறிவித்தல் வந்துள்ளது. எனக்கென்றால் பிரச்சினை இல்லை. சந்திரிக்கா அம்மையாரை ஏன் விரட்டவேண்டும்? அவரை அந்த வீட்டில் இருக்கவிடுங்கள். அவரின் கணவரை ஜே.வி.பி.யினர் தான் கொன்றனர். மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு வேண்டுமெனில் நிச்சயம் அது வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# கிராமத்திலிருந்து வறுமை ஒழிப்பு

அரசாங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.1

கிராமிய வறுமையை ஒழிப்பதில் அரசாங்கம் முதன்மை கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் வழங்கப்படமாட்டாது.

அமைச்சர்களின் சேவைகள் மக்களுடன் நேரடியாக இணைக்கப்படும். அவர்களுக்குக் கொழும்பில் வீடுகள் வழங்கப்படாது.

தலைவர்கள் தலைநகரில் குறிப்பாக தொலைதூரத்தில் இருப்பதைவிட உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்க்க தங்கள் மாவட்டங்களில் பணியாற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

# நீயா நானா போட்டியில் தமிழ்த் தலைமைகள்

## அங்கஜன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 1

மக்களுக்காக ஒன்றுபட இயலாத தமிழ்த் தலைமைகள் எப்படி மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பார்கள்? தங்களுக்குள் பிளவுபட்டு மக்களுடைய எதிர்பார்ப்பிலும் மண் அள்ளிப் போட்டுள்ளது - இவ்வாறு ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம் மக்கள் அரசியல் ரீதியாகவும் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் நிற்கவேண்டும் என்றால் தமிழர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையே பலம். ஆனால் இன்று எம் தமிழ்த் தலைமைகள் எமக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களை மறந்து தமது சுயலா பத்துக்காக ஆளுக்கோர் பக்கம் நீயா? நானா? எனப் பிரிந்து நிற்கின்றனர். தமிழ் மக்களுக்காக தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் என அனைவரும் நம்பி இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சைக்கிள், மான், மாம்பழம் , சங்கு எனப் பிளவடைந்து போயுள்ளது. மக்களுக்காக ஒன்றுபட இயலாதவர்கள் எப்படி மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பார்கள்? - என்றார். (ச-27)



# லொஹான் ரத்வத்தே கைதானார்

கொழும்பு, நவ. 1

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே கண்டியில் வைத்து நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நுகேகொட, மிரிஹான பிரதேசத்தில் உள்ள அவரது மனைவி வீட்டில் இலக்கத் தகடு இல்லாத கார் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த கார் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மஹிந்த ராஜபக்ச ஆட்சியின் போது பல்வேறு மோசடிகள் தொடர்பில் இவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஆதாயத்துக்கு மீனவர்கள் பலிக்கடாவா?

## சிவாஜிலிங்கம் காட்டம்



**கொழும்பு, நவ. 1**

**தேர்தல் ஆதாயத்துக்காக மீனவர் பிரச்சினையை கையிலெடுத்து ஏமாற்ற முயற்சித்தால் மீனவர்களது கடும் கோபத்துக்கு ஆளாகுவீர்கள் என்று அநுர அரசாங்கத்துக்கு ஜன நாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருநாடுகளுக்கு இடையிலான பிரச்சினையாக வலுவடைந்துள்ள மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண நடவடிக்கைகளை எடுக்காது அதனைத் தேர்தல் அரசியலுக்காக அரசு கையிலெடுத்துள்ளத.

மீனவர் பிரச்சினையானது இரண்டு நாட்டுப் பிரச்சினையாகும்.

இம்முறை தேர்தலின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நான் தெரிவு செய்யப்படுவேனாக இருந்தால் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண பாடுபடுவேன்.

மாற்றம் என்ற கோஷத்தோடு புதிதாக வந்துள்ள அநுர அரசின் செயற்பாடுகளில் எவ்வித மாற்றமுமில்லை. ஆட்சி மாறியுள்ளதே தவிர காட்சிகள் மாறவில்லை.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பேசியவர்கள் இப்போது மௌனமாக உள்ளனர்.

பொதுத்தேர்தலுக்குப் பின்னராவது அரசியல் கைதிகளை இந்த அரசு விடுவிக்குமா என்பது தெரியாத நிலையே காணப்படுகிறது.

புதிய மொந்தையில் பழைய கள் என்ற வகையிலேயே இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. போரில் கொல்லப்பட்ட எமது மக்களுக்கு இந்த அரசிடமும் நீதி கிடைக்காது- என்றார். (ச-100)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தீபாவளி தினத்தை முன்னிட்டு யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று வியாழக்கிழமை காலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ரி)

## கேதார கௌரி பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.1
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலயம் கண்ணகி அம்மன் ஆலய கேதாரி கௌரி காப்புப் கட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ரி)

✪ ✪ ✪ ✪

யாழ்ப்பாணம், நவ.1
கேதார கௌரி விரத நிறைவை முன்னிட்டு காப்புக்கட்டுதல் நிகழ்வின் விசேட பூசை வழிபாடுகள் பருத்தித்துறை கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு இடம்பெறவுள்ளது.
தொடர்ந்து 7.30 மணிக்கு வசந்த மண்டபபூசை இடம்பெற்று காப்புக்கட்டுதல் இடம்பெறவுள்ளது. (ரி-100)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆவணப்படம் திரையிடல்

யாழ்ப்பாணம், நவ.1
யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆண்டு கால வரலாற்றின் ஆவணப்படம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் திரையிடப்படவுள்ளது.
யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவர்களால் எழுத்துருப்பெற்று நெறியாள்கை செய்யப்பட்டு இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.
இந்த வரலாற்று ஆவணப்படம், மிசனரிமாரின் வருகையும் ஈழத்தில் கல்விக்கான விதைப்பும் அது எவ்வாறு பரிணமித்து இன்று விருட்சமாக யாழ்ப்பாணக்கல்லூரி மிளிருகின்றது என்பதையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. (ச-125)

## கந்தசஷ்டி உற்சவம்; நல்லூரில் வீதித்தடை

யாழ்ப்பாணம், நவ.1
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு தற்காலிகமாக வீதிகள் தடைசெய்யப்படவுள்ளன.
அதன்படி எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை பி.ப. 5மணி தொடக்கம் மாலை 6மணி வரையும், 6 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3மணி தொடக்கம் மாலை 6மணி வரையும், 7ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் இரவு 7மணி வரையும், 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 5மணி தொடக்கம் பி.ப 6மணி வரையும் நல்லூர் வீதிகள் தடை செய்யப்படவுள்ளன.
இதன்போது மக்கள் மாற்றுப்பாதைகளை பயன்படுத்துமாறு யாழ். மாநகரசபை மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச-ரி)



## தீபாவளியை முன்னிட்டு பொலிஸார் வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.1
தீபாவளி தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரின் ஏற்பாட்டில் பண்ணாகம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றன.
வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி தகொஸ்தா தலைமையில் இடம்பெற்ற பூசை வழிபாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ரி-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் வழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். மனதில் அவ்வப்போது சலனம் ஏற்பட்டு நீங்கும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்**மனதில் சிறு சலனம் ஏற்பட்டு நீங்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு ஏற்படும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கன்னி:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணம் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத சலுகை கிடைக்கக்கூடும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**தனுசு:**புதிய முயற்சி சாதகமாக முடியும். தந்தை வழியில் அனுகூலப் பலன்கள் ஏற்படும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தெய்வ வழிபாட்டின் மூலம் பிரச்னைகளைச் சமாளித்துவிடுவீர்கள். புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். வீண் அலைச்சலால் உடல் அசதி ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஆதாயம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தஷஷ்டி சிறப்புப்பூசை!

யாழ்ப்பாணம், நவ. 1
கந்தசஷ்டியை முன்னிட்டு தம்பசிட்டி மலையந்தோட்டம் அருள்மிகு முருகன் கோவிலில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.
கந்தசஷ்டி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற உள்ளது. இதனை முன்னிட்டு தினமும் மாலை 4.30 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று 5.30 மணிக்கு பூசை வழிபாடு நடைபெற்று கந்தசஷ்டி விரதமிருக்கும் அடியவர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கப்பட உள்ளது.
சூரன் போர் அன்று விரதகார பெருமக்களுக்கு இளநீர் பிரசாதம் வழங்கப்பட்டு மறுநாள் காலை பாறணை பூசை இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்பட உள்ளது. (ச-100)


# சங்கின் விஞ்ஞாபனம் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.1
நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை 3.45 மணியளவில் யாழ்.நகரில் அமைந்துள்ள விடுதியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், தர்மலிங்கம் சித்தார்த்தன், குருசாமி சுரேன், சி.வேந்தன், சசிகலா ரவிராஜ், பாலச்சந்திரன் கஜதீபன், ஜெ.ஜனார்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-66)




## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்புக்குரிய மக்களே!**
'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம்.
எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் **'சைக்கிள்'** சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

**தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!**




**'இரு தேசங்கள் ஒரு நாடு'**
இலக்கினை அடைய
**ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!**

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



## நாடாளுமன்றத் தேர்தல் -2024

- அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும் தமிழரின் குரல்வளையை நசுக்கியபோது எதற்கும் அஞ்சாது துணிந்து எதிர்த்து நின்ற மானமுள்ள ஒற்றைத் தமிழன் கே.வி.தவராசா.
- சிங்களத்தின் கோட்டைக்குள் நின்று அஞ்சாது அனைத்தையும் எதிர்கொண்ட வீரத் தமிழன்.
- 2006 இல் கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் பரமேஸ்வரி மற்றும் சுசந்திகாவை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிடியில் இருந்து விடுவித்தார்.
- ஊடகவியலாளர் யசிதரனையும் வளர்மதியையும் சிறையிலிருந்து காப்பாற்றினார்.
- உதயன் பத்திரிகை நிர்வாக இயக்குநர் சரவணபவனை பயங்கரவாதச் சட்டத்தின் பிடியில் இருந்து காப்பாற்றினார்.
- ஊடகவியலாளர் வித்தியாதரனை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றியவர் கே.வி.தவராசா.
- இதுதவிர பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டு கைதுசெய்யப்பட்ட வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் சிறிகஜன், தமிழ்க்கொடி டிவினியா போன்றவர்களையும் சிறையிலிருந்து விடுவித்தார்.
- கப்பிடல் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ராஜன் கைது செய்யப்பட்ட போது அவருடைய விடுதலைக்காகவும் கே.வி.தவராசாவே முன்னின்றார்.
- இத்தகைய மாபெரும் சட்டப் போராளியை இனத்தின் நலனுக்காக தமிழ் தேசியத்தின் ஏக குரலாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்வோம்.





**K.V.தவராசா**
சுயேச்சைக்குழு -14

X 3

**தமிழர்களின் நீதிக்காக**
**43 வருடங்களாக போராடுபவருக்கே**
**உங்கள் வாக்கு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெள்ளப் பாதிப்பு; சீனா நன்கொடை


கொழும்பு, நவ. 1
இலங்கைக்கு 400 மில்லியன் ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்க சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
அண்மைய நாள்களில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கருதி இந்த உதவி வழங்கப்படவுள்ளது.
சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சீன அரசாங்கம் கடந்த 22ஆம் திகதி இலங்கைக்கு 30 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியது. அந்த நிதி உதவிக்கு மேலதிகமாக இந்த உதவியும் வழங்கப்படவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ச)




ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு விசயத்தில கைராசி இருக்குது. கற்கோவளத்தில வீட்டுக்க படுத்திருந்த புருசனையும், பெஞ்சாதியையும் கொலை செய்தவையில் ஒராளுக்கு கைராசிக்குப் பதிலா கொலைராசி இருக்குது. அதுவும் சும்மா கொலைராசியில்லை, இரட்டைக் கொலை ராசி. 2019 ஆம் ஆண்டு அவருக்கும் , மாமானாருக்கும் ஒரு கொழுவல். 'பொறுவாறன் உனக்கு' எண்டு கறுவிக்கொண்டு , அந்தக் கோபத்தில ஆள் போய் மூக்குமுட்ட கசிப்பை மண்டிப்போட்டு, கையில் கத்தியை எடுத்துக்கொண்டு குடத்தனை , மாளிகைத்திடலில இருக்கிற மாமனார் வீட்டடிக்கு இரவு போயிருக்கிறார். ஆளுக்கு வெறியிலையும், இருட்டிலையும் மாமானார் வீட்டுக்குப் பதிலா பக்கத்து வீட்டுக்குள்ள பூந்து, அங்க இருந்த புருசனையும், பெஞ்சாதியையும் கத்தியால வெட்டித் தள்ளியிருக்கிறார். அக்கம் பக்கத்துச் சனங்கள் சத்தம் கேட்டு ஓடிவர, இந்தக் கொலைகாரன் அவையை வெருட்டிப் போட்டு ஓடிட்டான். ஆள் ஆரெண்டு ஆக்கள் அடையாளம் கண்டதால, உடனேயே பொலிஸ் பிடிச்சு ஜெயில்ல போட்டிட்டுது. அந்த வழக்கு இன்னும் நடந்து கொண்டிருக்குது. ஆனால் ஆள் பிணையில வெளியில வந்திட்டார்.

இப்பிடியிருக்கேக்கதான் மந்திகை ஆஸ்பத்திரியில உடுப்புகள், துணியளை சலவை செய்து குடுக்கிற 'ரெண்டர்' எடுக்கிறதில ரண்டு பேருக்கிடையில போட்டி வந்திருக்கு. அதில கற்கோவளத்தில் அண்டைக்கு செத்த சுப்பிரமணியம் குறைவான தொகையைக் குடுத்ததால அவருக்கே அந்த ஒப்பந்தம் கிடைச்சிருக்கு. இதால போட்டிக்கு நிண்டவருக்கு கடும் ஆத்திரம். இந்த நேரத்தில ஊரில ஒரு செத்தவீட்டில சுப்பிரமணியமும், அந்த ரெண்டர் விசயத்தில தோத்தவரும் நேருக்கு நேர சந்திச்சிருக்கினம். செத்தவீடெண்டும் பாக்காமல் ரண்டு பேரும் கடும் வாக்குவாதப்பட்டுமிருக்கினம். இந்த வாக்குவாதம் சுடலை மட்டும் நீண்டிருக்கு. அதுக்குப் பிறகுதான் 'ரெண்டர்' எடுக்கமுடியாமல் போனவர், சுப்பிரமணியத்தை துலைச்சுக் கட்டவேணும் எண்டு, முதல் சொன்ன ரெட்டைக்கொலை ராசிக்காரரிட்ட சொல்லிப்போட்டு, அவருக்கு கசிப்பு, பியர் எண்டும் வாங்கிக் குடுத்திருக்கினம். பிறகு அவரோட சேர்ந்து போய், சுப்பிரமணியம் வீட்டுக்குள்ள புகுந்து அவரையும் மனுசியையும் கொங்கிறீட் கல்லால குத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் இப்ப ரட்டைக்கொலை ராசிக்காரர் தான் கொலை செய்தவர் எண்டும் மற்ற ரண்டுபேரும் அவரை ஏவி விட்டவை எண்டும் தான் பொலிஸிட்ட திரும்ப திரும்ப சொல்லுகினமாம்.

இப்ப அங்கத்தைச் சனங்கள் கெடிக்கலத்தில இருக்குது. உந்த ரட்டைக் கொலைராசிக்காரன் இந்த வழக்கிலையும் பிணையில வந்தால், பிறகும் இப்பிடியான வேலையளைச் செய்யமாட்டான் எண்டு என்ன நிச்சயம்? எப்படியும் அவனுக்கு முதல் செய்த கொலையளுக்கு கடும் தண்டனை கிடைக்கும். அதால இப்பிடி பிணையில நிக்கிற காலத்திலயும் கொலை செய்யிறதுக்கு அவனுக்கு கை கூசாதெல்லோ. 'அந்தக் கொலைகாரனுக்கு இந்த வழக்கில பிணை குடுக்காமல் உள்ளுக்கையே வைச்சிருந்து தண்டனை குடுக்கோணும்' எண்டதுதான் அங்கத்தைச் சனத்தின்ர அங்கலாய்ப்பா கிடக்கு. சம்பந்தப்பட்டவை இதைக் கொஞ்சம் கவனத்தில எடுத்தால் நல்லது.



-பட்சி

padsi@uthayan.com

## அநுரவின் பாதுகாப்புக்கு குண்டு துளைக்காத கார்

யாழ்ப்பாணம், நவ.1
பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு குண்டு துளைக்காத வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது.
பாதுகாப்புத் தரப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுகளின் பரிந்துரைக்கமையவே இந்த வாகனம் வழங்கப்பட்டுள்ளது.
எனினும், வாகனத்துக்குரிய எரிபொருள் செலவை தேசிய மக்கள் சக்தியே ஏற்றுள்ளது. அதற்கு அரசாங்க பணம் பயன்படுத்தப்படமாட்டாது.
கட்சி சார்ந்த பிரசாரத்தில் ஜனாதிபதி ஈடுபடுவதாலேயே அரச நிதியை அதற்குப் பயன்படுத்தாமல் கட்சியின் நிதி பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

## இலங்கை –போலந்து புதிய விமான சேவை

கொழும்பு, நவ. 1
போலந்தில் இயங்கும் மிகப்பெரிய தனியார் விமான நிறுவனமான என்டர் ஏர் இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான புதிய விமான சேவையை ஆரம்பித்துள்ளது.
வார்சா - கொழும்பு இடையிலான இந்தப் புதிய விமான சேவை எதிர்வரும் 2025 மார்ச் இறுதிவரை தொடர்ந்து இயங்கவுள்ளது.
இது இரு நாடுகளுக்கும் இடையிலான பயண மற்றும் சுற்றுலா இணைப்புகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. (ச)

# அர்ச்சுனா நிதிவிவகாரம்; எங்களுக்குத் தெரியாது!

### அவரது கட்சி வேட்பாளர் மயூரன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1
அர்ச்சுனாவின் நிதிக்கையாள்கை பற்றிய விடயங்கள் தொடர்பிலான தெளிவு எங்களிடம் இல்லை என மருத்துவர் அர்ச்சுனாவின் சுயேச்சைக்குழு வேட்பாளர் சி. மயூரன் தெரிவித்துள்ளார். யாழ் . ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
அர்ச்சுனாவுக்கு வெளிநாட்டில் இருந்து நிதி வந்ததா ? இல்லையா என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது. உண்மையில் நிதி சம்பந்தமாக வெளியாட்களுக்கு என்ன தெரியுமோ, அது தான் எங்களுக்கும் தெரியும். தெரியாத விடயத்துக்கு நான் விளக்கம் கொடுக்கமுடியாது.
தேர்தல் முடிய தேர்தல் செலவினம் தொடர்பில் அர்ச்சுனா வெளியிடுவார் என நம்புகிறேன் - என்றார். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய மொந்தையில் பழைய கள்ளே

'மாற்றம்,மாற்றம்' என்று கூறி ஆட்சிக்கு வந்த அநுரகுமார திஸாநாயக்கவின் 'சுருதி' இப்போது மெல்ல மெல்ல மாறத் தொடங்கியிருக்கின்றது. தமிழ் மக்களின் மனங்களில் இருந்து சிறு நம்பிக்கையையும் இல்லாமல் செய்யும் வேலையையே அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தீவிரமாக முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது. தேசிய மக்கள் சக்தி கூறும் மாற்றம் தெற்குக்கு மட்டுமே என்பதும், தமிழ் மக்களுக்கு அந்த மாற்றத்தால் எதுவும் கிடைத்துவிடாது என்பதும் நிரூபணமாகி வருகின்றது.

இதற்கு ஓர் அண்மைய உதாரணம், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக அரசாங்கத் தரப்பில் இருந்து வெளியாகியிருக்கும் அறிவிப்பு. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், ஜனாதிபதித் தேர்தலின் போதும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கடுமையாக விமர்சித்து வந்தது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பயங்கரவாத தடைச்சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சார்ந்த சட்டங்கள் இல்லாதொழிக்கப்பட்டு அனைத்து மக்களினதும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் என்று அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார். ஆனால் பதவிக்கு வந்து சில வாரங்களிலேயே பயங்கரவாதத் தடைச்சட்ட விவகாரத்தில் பல்டி அடித்திருக்கின்றது தேசிய மக்கள் சக்தி. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படாது என்றும், அதில் மாற்றங்கள் மட்டுமே செய்யப்படும் என்றும் கூறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக ஆராயப்படும் என்றும் கூறியிருக்கின்றது. ஜனாதிபதி செயலகத்தின் இயக்குநர் சட்டத்தரணி ஜே.எம்.விஜயபண்டார பயங்கரவாதத் தடைச் சட்டத்தைச் சரியாகப் பயன் படுத்தினால் எந்தச் சிக்கலும் ஏற்படாது என்று வேறு கூறியிருக்கின்றார்.

இலங்கையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினால் பெரும்பாலும் தமிழர்களே பாதிக்கப்பட்டிருந்தார்கள். இந்தச் சட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, இன்றும் அவர்களில் சிலர் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். இந்தச் சட்டம் இதுவரையில் தமிழர்களைப் பழிவாங்கவே அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தக் கொடுமையான சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று தமிழர்கள் கோரிவந்தபோதும் அதைத் தெற்கு சட்டைசெய்யவில்லை. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே, ஈஸ்டர் தாக்குதல், 'அரகலய போராட்டம்' என்பவற்றின் போது தெற்கில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரம் உணரப்பட்டது. அதன்பின்னரே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் இருந்தும் எழ ஆரம்பித்தது. தேசிய மக்கள் சக்தி தனது அரசியலுக்காக அதைப் பயன்படுத்திக் கொண்டது. தங்களுக்கு அதிகாரம் தந்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிப்போம் என்று மேடைக்கு மேடை அந்தக் கட்சி உறுதியளித்திருந்தது.

ஆனால், தேர்தலில் வென்று ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியில் அமர்ந்ததும் அவர்களின் சுருதி மாறியிருக்கின்றது. கடந்த காலங்களில் ஆட்சிக் கட்டிலில் இருந்தவர்களுக்கும், இவர்களுக்கும் எவ்விதமான வித்தியாசத்தையும் காணமுடியவில்லை. கடந்த காலங்களில் வாக்குக் கிடைத்ததும் வாக்குறுதிகளைத் தவறவிடும் அரசியல் தலைமைகளுக்கும், அநுரகுமார திஸாநாயக்கவும் குறைந்த பட்சம் ஆறு வித்தியாசங்களைக் கூட கண்டுபிடிக்கமுடியவில்லை. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மாற்றமெனச் சொல்லி ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம் 'புதிய மொந்தையில் பழைய கள்ளே' இந்த அரசாங்கத்தால் தமிழ் மக்களின் அவலங்கள் எதுவும் மாறிவிடப் போவதில்லை.



## பொலிஸாரின் திருகுதாளம்; வீடியோ எடுக்க அனுமதி

கொழும்பு, நவ. 1

**பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை காணொலி காட்சிப்படுத்துவதற்கு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

கொழும்பின் புலனாய்வு ஊடக இணையத்தளம் ஒன்றின் தகவல்படி, சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் இது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
பொதுமக்களின் இத்தகைய நடவடிக்கைகளை சட்டவிரோதமானதாகவோ அல்லது சட்டத்துக்கு எதிரானதாகவோ கருதக்கூடாது.
பொதுமக்களால் காட்சிப்படுத்தப்படும் காணொலிகள் நாட்டின் சட்டங்களின்படி, குற்றங்கள் மற்றும் சிவில் வழக்குகளில் ஆதாரமாக பயன்படுத்தப்படலாம். என்றும் பதில் பொலிஸ மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## இந்திய சுற்றுலாவிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1
இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதத்தின் 27ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 117,141 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.
அவர்களில் 32,097சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச)



## வர்த்தகர் வீட்டில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, நவ. 1
கொழும்பின் புறநகர்ப் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் வீட்டில் இருந்த எவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



## தட்டம்மை தடுப்பூசி திட்டம் ஆரம்பம்

தட்டம்மை தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொற்றா நோய் பிரிவின் நிபுணர் டொக்டர் ஹசித திசேரா தெரிவித்துள்ளார். அதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம்திகதி முதல் 9ஆம் திகதி வரை 12 மாவட்டங்களை உள்ளடக்கி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



## பணவீக்கம் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 1
கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒக்ரோபர் மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை கடந்த மாதம் செப்ரெம்பர் மாதம் மறை 0.3 ஆக இருந்த உணவுப் பணவீக்கம் ஒக்ரோபர் மாதம் சிறியளவு உயர்ந்தும் ஒரு சதவீதமாக பதிவாகியுள்ளது. (ச)

நாளை
02.11.2024
சனிக்கிழமை - ஐப்பசி - 16
சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம் : 09.04 - 10.34

### நாளொரு நல்வார்த்தை

மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்

- சீனப் பழமொழி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை இடரைத் தவிர்க்க ஆளுக்கொரு மரம் நடுவோம்

## பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன் அழைப்பு



யாழ்ப்பாணம், நவ.1

**மாவீரர்களைப் போற்றும் இந்தப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப்பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் - இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மரங்களை ஆதித் தெய்வங்களாக வழிபட்ட நாம் இறந்தவர்கள் நினைவாக மரங்களை நாட்டும் தொல் மரபையும் கொண்டிருந்தோம். இந்தப் பண்பாட்டு மரபே காலநிலை மாற்றங்களின் தாக்குதல்களில் இருந்து எம்மையும் எம்பூமியையும் காப்பாற்றும் உலகம் இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் தலையாய பிரச்சினையாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. பூமியின் சராசரி வெப்பநிலை ஆண்டுக்கு ஆண்டு எகிறிவருகிறது. அந்த வகையில் மாவீரர்களைப் போற்றும் இந்தப் புனித கார்த்திகையில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் - என்றுள்ளது. (ச-27)



## தேர்தல் அலுவலகம் யாழில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், நவ.1

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ்ப்பாணம் சாவகச்சேரி தொகுதிக்கான தேர்தல் அலுவலகம் கைதடியில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் அலுவலகத்தை திறந்து வைத்தார். நிகழ்வில் சாவகச்சேரி தொகுதி வேட்பாளர் கஜேந்திரன் உள்ளிட்ட சக வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-20)




## உறவுகளுக்கு நீதிகோரி கவனவீர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி, நவ.1

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சியில்நேற்று வியாழக்கிழமைகவன வீர்ப்புப் போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க அலுவலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது பிள்ளைகளின் படங்களையும், பதாகைகளையும் ஏந்தியவாறு நீதி வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ரி-113)



## வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

நெடுந்தீவுப் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி ரண் விமன வீட்டுத்திட்டம் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலாளர் திருமதி நிவேதிதா கேதீசன கலந்துகொண்டார். (ரி-9)



## யாழ்.பல்கலையில் கல் ஆசனங்கள்

கொழும்பு, நவ.1

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாகக் கல்லாசனங்கள், மேசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதியின் அனுசரணையுடன் பல்கலைக்கழகக் கலைப்பீட வளாகத்தில் அவை பொருத்தப்பட்டுள்ளன. (ச-66)



## விழிப்புணர்வு நிகழ்வு

கிளிநொச்சி, நவ.1

பச்சிலைப்பள்ளியில் சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவால் பாரம்பரிய போஷாக்கு உணவினை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு கிளாலி கிராம அலுவலர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சமூக மருத்துவ அலுவலர் சி.நிரோசன் வளவாளராக கலந்து கொண்டார். (ரி-9)



## காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்குமிடையிலான காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடல் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் உறுப்பினர்களான தியாகராஜா யோகராஜா, அர்பா தாசிம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. (ரி-27,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Keells உடன் இணைந்துகொள்ள உங்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு

நேர்முகத்தேர்வு

2024 நவம்பர் 3ம் திகதி

யாழ்ப்பாணம் (வீரசிங்கம் மண்டபத்தில்)

மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை

தொடர்புகளுக்கு

077 168 9579 | 076 466 4415 | 076 886 7194

Keells | oneJKH

The John Keells Group is an equal opportunity employer and we invite applications from all suitably qualified individuals to join our team.

"By applying, you consent to the processing of your personal information for recruitment purposes and acknowledge that reference checks may be conducted"


# 150ஆவது அகவையில் காலடிபதித்த கொழும்புத்துறை இந்து மகா வித்தி.

**பா.நந்தகுமார்**
*உறுப்பினர்*
*பழைய மாணவர் சங்கம்*

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஆங்கில மொழிக்கும் கிறிஸ்தவ சமயத்துக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அனேக சைவசமயத்தவர்கள் உத்தியோகத்தை கருதி மதமாற்றம் செய்யப்பட்டனர். சைவசமய பெரியார்களும் ஆரம்பத்தில் கிறிஸ்தவ பாடசாலைகளிலேயே கல்வி கற்றனர். அதன் பேராகவே சைவசமயத்தையும், தமிழ்மொழியையும் வளர்க்கவேண்டும் என்று ஆர்வம் கொண்டனர்.

ஆறுமுகநாவலர், பசுபதிச்செட்டியார் போன்ற பெரியார்கள் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் சைவசமய பாடசாலைகளை ஆரம்பித்தனர். சேர் பொன். இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி போன்றவற்றை ஆரம்பித்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் அனேகமான சைவப்பாடசாலைகளை வழக்கறிஞர் இராசரத்தினம் நடத்தினார்.

கொழும்புத்துறை எனும் அழகிய கிராமத்தில் 1874ஆம் ஆண்டு சிவகுருநாதப்பிள்ளையால் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத்துக்கு சொந்தமான 'சிறுப்புலம்' என்ற காணியில் அமைக்கப்பட்டது. அதே ஆண்டு ஜுன் மாதம் 22ஆம் திகதி இப்பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் கொழும்புத்துறை சைவ வித்தியாசாலை என்று அழைக்கப்பட்டது. 1963ஆம் ஆண்டில் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.




இசை நிபுண வித்தக ஆளுமையாளரான பரம் தில்லைராஜா அப்போது அதிபராகக் கடமையாற்றினார். சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள், குன்றக்குடி அடிகளார், ஆத்மஜோதி முத்தையா, செல்லப்பா சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் போன்றோர் இந்தப் பாடசாலையில் கால் பதித்துள்ளனர். யோகர் சுவாமிகளின் ஆச்சிரமம் இந்தப் பாடசாலைக்கு எதிராகவுள்ளது. 1999ஆம் ஆண்டில் இந்தப் பாடசாலை 125ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடியது. தற்போது 150ஆவது பெருவிழாவை கொண்டாடுகிறது. இங்கு கல்வி கற்று வெளியேறிய பலர் இலங்கையின் பல பாகங்களிலும் வசித்து உயர் பதவிகளை வகித்து வருவதோடு சிலர் புலம்பெயர்ந்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் 75 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் இருந்தனர். பின்னர் 1963ஆம் ஆண்டு அரசால் பொறுப்பேற்கப்பட்ட பின் கட்டடங்கள் கட்டப்பட்டன. விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது.

காலப்போக்கில் பாடசாலை வளர்ச்சி கண்டபின் அதிபர் அலுவலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், ஆசிரியர்கள் ஓய்வு அறை, சங்கீத அறை போன்றன தனித்தனியாக அமைக்கப்பட்டன.

சைவமும் தமிழும் தளைத்தோங்கும் இந்தப்பாடசாலைக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் வருகை தந்துள்ளார். இங்கு சமய குரவர்களின் குருபூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

தற்போது, அரியாலை, சுண்டுக்குழி, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் போன்ற அயல் கிராமங்களை சேர்ந்த நூற்றுக்கணக்கான பிள்ளைகள் இங்கே கல்வி கற்கின்றனர். இவ்வாறு பல வரலாற்றுப் புகழ்கொண்ட இந்தப் பாடசாலை சீரும் சிறப்பும் பெற்று மென்மேலும் வளர்வதற்கு நாமும் துணைநிற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெய்னில் கடும் வெள்ளம் இதுவரை 95 பேர் உயிரிழப்பு


நியூயோர்க், நவ.1

தென்கிழக்கு ஸ்பெய்னில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 95 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஸ்பெயினின் வானிலை அவதான நிலையம் வலென்சியாவில் மழை வெள்ளம் குறித்து எச்சரித்திருந்தது.

மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்றும், கடும் ஆபத்துள்ளது மிகவும் அவசரமான தேவையென்றால் மாத்திரம் போக்குவரத்தை மேற்கொள்ளுங்கள் என சமூக ஊடகத்தில் எச்சரித்திருந்த வானிலை அவதான நிலையம் பின்னர் ஆகக்கூடிய சிவப்பு எச்சரிக்கையை விடுத்தது. அன்று முழுவதும் பல தடவைகள் எச்சரிக்கைகள் வெளியாகின. மக்கள் ஆறுகள் காணப்படும் பகுதியை நோக்கி செல்வதை தடுக்க வேண்டும் என உள்ளூர் அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டார்கள். கனமழையால் சடுதியாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மக்கள் பல இடங்களில் சிக்கிக்கொண்டுள்ளனர். அவர்களை மீட்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)





## ஹிஸ்புல்லாவுக்கு தலைவர் காசிம்!

பெய்ரூட், நவ.1

ஹிஸ்புல்லா அமைப்பின் பிரதிச் செயலாளராகச் செயற்பட்டுவந்த நைம் காசிம் அந்த அமைப்பின் புதிய தலைவராக நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பெய்ரூட்டில், இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நஸ்ரல்லாஹ் கொல்லப்பட்டார்.

தொடர்ச்சியான தாக்குதல்களில் அமைப்பின் பெரும்பாலான தலைவர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில், ஹிஸ்புல்லா அமைப்பில் புதிய தலைவராக நைம் காசிம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ஏ-இ)

## இந்தியாவுக்கு எதிரான தகவலை கசியவிட்ட கனேடிய அதிகாரிகள்!


ரொறன்ரோ, நவ.1

இந்தியாவுக்கு எதிரான உளவுத்துறைத் தகவல்களை வொஷிங்டன் போஸ்ட்டுக்கு கசியவிட்டதை கனேடிய அரசாங்கத்தின் இரண்டு மூத்த அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஹர்தீப்சிங்நிஜ்ஜார் கொலையில் இந்திய அரசின் முகவர்களுக்கு தொடர்பு உள்ளது எனக் கனடா குற்றம் சாட்டுவதற்கு முன்பே இந்தத் தகவல் கசிந்துள்ளன என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

கனடாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை ஆலோசகர் நதாலி ட்ரூயின் மற்றும் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் டேவிட் மோரிசன் ஆகியோரால் இந்தத் தகவல் கசியவிடப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள ட்ரூயின், இது போன்ற தகவல்களை கசியவிட பிரதமரின் அனுமதி தேவையில்லை என்று தெரிவித்துள்ளார். இந்தத் தகவல்களை கசிய விடுவதற்கான முடிவு, இந்தியாவுடன் தீவிரமடைந்து வரும் வெளிநாட்டு தலையீடல் சர்ச்சையில் கனடாவின் நிலைப்பாட்டை அமெரிக்க பத்திரிகை அறிக்கை செய்வதை உறுதிப்படுத்த வகுத்த வியூகத்தின் ஒரு பகுதியாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ-இ)



## அணு ஆயுதச் சோதனை நடத்தியது ரஷ்யா

மொஸ்கோ, நவ.1

ரஷ்யாவில் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் நேரடிக் கண்காணிப்பில் அணு ஆயுத சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என்றும், அந்த ஏவுகணை கண்டம் விட்டுக் கண்டம்பாயும் திறன் கொண்டவை என்றும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

உலகின் மிகப்பெரிய அணுசக்தி நாடுகளில் ரஷ்யாவும் ஒன்று. உலகின் 88 சதவீத அணு ஆயுதங்களை அமெரிக்காவும், ரஷ்யாவுமே வைத்துள்ளன. ரஷ்யா- உக்ரைன் போர் நடைபெற்று வரும் நிலையில் ரஷ்யா அணு ஆயுத சோதனை நடத்தியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சோதனை பலமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அதிகரித்து வரும் அச்சுறுத்தல்கள் மற்றும் எதிரிகளை எதிர்கொள்ள தயாராக இருப்பது அவசியம் என்றும், அதனால் தான் இதுபோன்ற சோதனை தேவை என்றும் புடின் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# வெடிகுண்டு அச்சுறுத்தலால் சென்னையில் பெரும் பதற்றம்

சென்னை, நவ.1

சென்னைக்கு வரும் 11 விமானங்களில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளன என்று சென்னை விமான நிலையத்துக்கு மீண்டும் மின்னஞ்சல் வந்ததால் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலைய இயக்குநர் அலுவலகத்துக்கு வந்த மின்னஞ்சலில் சென்னைக்கு வரும் இலங்கை, மும்பை, பெங்களூர், சிலிகுரி, டெல்லி, கொல்கத்தா உள்ளிட்ட 8 ஏர் இந்தியா விமானங்கள் மற்றும் கோவா, புனே, ஐதராபாத் ஆகிய 3 இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானங்கள் என மொத்தம் 11 விமானங்களில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதையடுத்து சென்னை விமான நிலைய வெடிகுண்டு நிபுணர்கள், பாதுகாப்பு அலுவலர்கள், மோப்பநாய்களுடன் விமானங்களில் சோதனை நடத்தினர். ஆயினும் வெடிகுண்டுகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. (ஏ-இ)

## இஸ்ரேலின் இலக்கு பால்பெக் நகரம்!

கிழக்கு லெபனானில் உள்ள பால்பெக் நகரை இஸ்ரேல் இலக்கு வைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த நகரில் வசித்து வரும் மக்கள் அனைவரும் உடனடியாக வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெளியேற சொல்லும் இடத்தில், யுனெஸ்கோ பாரம்பரிய பழங்காலத்து ரோமன் டெம்பிள் காம்ப்ளக்ஸ் உள்ளது. பால்பெக் நகர், பெகா பள்ளத்தாக்கிற்கு செல்லும் முக்கியமான வழியாகும். இந்தப் பகுதிகளை ஏற்கனவே இஸ்ரேல் சுற்றி வளைத்துள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கியின் நிதி: வெளிப்படை பேணுக

## கம்மன்பில தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 1**

**உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தரப்பும், உலக வங்கியும் உண்மையாகச் செயற்படுகின்றனவா என்ற உண்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.**

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்துக்குள் கடன் பெற்றுள்ளதா? இல்லையா? என்பதை சரிபார்க்க உலக வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

இதில் அரசாங்கம் உண்மையாக இருந்தால், உலக வங்கி பொய் சொல்லவேண்டும் அல்லது உலக வங்கியின் கூற்று உண்மையாக இருந்தால், அமைச்சர் விஜித ஹேரத் பொய் சொல்கிறார் என்று எடுத்துக்கொள்ள முடியும்.

அரசாங்கம் தமக்கு நேரடியாகக் கடன் வழங்குவதற்குப் பணத்தை அச்சிடவில்லை என்றாலும், அந்நியச் செலாவணியை வாங்குவதற்கும் நிதிச் சந்தையில் பணப் புழக்கம் மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் பணம் அச்சிடப்பட்டது என்பதை இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது என்றும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# இளையோர் சக்தி உருவெடுக்கட்டும்

## சந்திரகுமார் அழைப்பு

கிளிநொச்சி, நவ. 1

நாட்டுக்கும், மக்களுக்குமான பொருத்தமான அரசியலை தீர்மானிக்கின்ற சக்தியாக இளைஞர்கள் மாறவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். -கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடுகின்ற நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி திருவையாறு கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் மகிழ்ச்சியளிக்கிறது. புதிய அரசியல் மாற்றத்தை நோக்கி சிந்திக்கவும், செயற்படவும் தொடங்கியிருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் இந்த இளைஞர்கள் தாங்கள் நம்பி பயணித்த அரசியல் தலைமைகள் நட்டாற்றில் விட்டது போல விட்டுச் சென்றுள்ளனர். இளைஞர்கள் எதிர்பார்த்த எவையும் நிறைவேற்றப்படவில்லை. அவர்களை உசுப்பேற்றி, வாக்குகளை அபகரித்து பதவிகளுக்கு வந்தவர்களால் அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

ஆகவே இம்முறை நாம் அதிகாரத்துக்கு வந்தவுடன் இளம் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் நிறைவேற்றுவோம். வெறும் வார்த்தைகளாலும், அறிக்கைகளாலும், உணர்ச்சி பேச்சுகளாலும் அரசியல் செய்பவன் நானல்ல என்பதனை இளைஞர்கள் விளங்கிக் கொண்டுள்ளனர்- என்றார். (ச-113)

### தேசிய மக்கள் சக்திக்கு

# எல்பிட்டிய தேர்தலில் பின்னடைவு இல்லை

## கூறுகிறார் திஸாநாயக்க

கொழும்பு, நவ.1

எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்படவில்லை. பொதுத்தேர்தலில் அக்கட்சி இலகுவில் சாதாரணப் பெரும்பான்மை பலத்தை பெறும்.

-இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் போன்ற தேசிய மட்ட தேர்தல்களால் எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் தொடர்பில் பெரிதாக கவனம் செலுத்தப்படவில்லை. அப்படி இருந்தும் தேசிய மக்கள் சக்திக்கு 15 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைப் பின்னடைவு எனக் கூறமுடியாது.

தேசிய மக்கள் சக்தி சாதாரண பெரும்பான்மையை இலகுவில் பெறும்.

தேசிய மக்கள் சக்தியில் வாக்குக் கேட்கும் எண்ணம் எனக்கு இல்லை. கிடைத்துள்ள மாற்றத்தை அவர்கள் சிறப்பாக முன்னெடுத்து செல்ல வேண்டும் - என்றார். (ச-44)

# அநுரகுமாரவுக்கு கணிதம் தெரியுமா?

## ரணில் கேள்வி

கொழும்பு, நவ.1

நாடாளுமன்றத்தை கள்வர்களின் குகையென விமர்சிப்பதற்குரிய உரிமை பெரும்பான்மையை பெறாத ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கிடையாது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசியாவிலேயே இலங்கையில்தான் பழமையான நாடாளுமன்றம் உள்ளது. நாடாளுமன்ற அமர்வுகளை நிறுத்தாது தொடர்ச்சியாக செயற்பட்டுள்ள நாடாளுமன்றம் என்ற பெருமையும் எமது நாட்டுக்கு உள்ளது. எதிர்க்கட்சிகளை தடைவிதித்துவிட்டு செயற்படவும் இல்லை.

நாடாளுமன்றத்தில் முழு அதிகாரத்தையும் தமது கட்சிக்கு வழங்குமாறு அநுரகுமார திஸாநாயக்க சொல்கின்றார். அவருக்கு 42 சதவீத வாக்குகள்தான் கிடைக்கப்பெற்றன. அவர் எப்படி முழு அதிகாரத்தையும் கோர முடியும்? அவருக்கு கணிதம் தெரியவில்லையா? - என்றார். (ச-44)

# மாலைதீவு அதிபர் இலங்கை வருகை

கொழும்பு, நவ. 1

மாலைதீவின் ஜனாதிபதி விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக அந்த நாட்டின் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலாளர் நந்திக சனத் குமாரநாயக்க மற்றும் மாலைதீவு தூதுவர் மசூத் இமாத் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மாலைதீவு மற்றும் இலங்கையின் சுற்றுலா, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளை முன்னேற்றுவது குறித்தும் இரு தரப்பினராலும் ஆராயப்பட்டுள்ளது. (ச)



# 115 ஆசனங்களைக் கைப்பற்ற முடியுமா?

## தே.ம. சக்திக்கு மஹிந்தானந்த சவால்

கொழும்பு, நவ.1

பொதுத்தேர்தலில் முடிந்தால் 115 ஆசனங்களையாவது கைப்பற்றி காட்டுமாறு தேசிய மக்கள் சக்திக்கு முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜே.வி.பி.யினர் கடந்த பல தசாப்தங்களாக விமர்சன அரசியலையே முன்னெடுத்துவந்தனர். அப்போது அக்கட்சியினர் எதிரணியில் இருந்தனர். இன்று ஆளுங்கட்சியில் உள்ளனர்.

எனினும், மாற்றம் இல்லை. முன்னாள் அரசுகளால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களே செயற்படுத்தப்படுகின்றன. தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆதரவு குறைந்துவருகின்றது. எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவு இதை வெளிப்படுத்தியது.

நாம் ஆட்சியைக் கைப்பற்ற முற்படவில்லை. பலமான எதிரணியை அமைக்கவே முயற்சிக்கின்றோம். பொதுத்தேர்தலில் முடிந்தால் 115 ஆசனங்களையாவது தேசிய மக்கள் சக்தி கைப்பற்றிக் காட்டட்டும் - என்றார். (ச- 44)

# மின்னல் தாக்கி சிறுமி பலி

கொழும்பு, நவ.1

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பத்தன்ன பகுதியில் மின்னல் தாக்கியதில் 11 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடு கட்டுவதற்காக வெட்டி வைக்கப்பட்டிருந்த தளத்தில் மண்வெட்டியுடன் சகோதரனும் சகோதரியும் நின்று கொண்டிருந்த வேளையில் மின்னல் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02 | | 30 |
| 06 |  | 10 |
| 1937 | | 2024 |

# திரு.வைத்திலிங்கம் சற்குணம்

## ஸ்தாபகர்- Citysun Hardware Stanly Road, Jaffna.
## Chairman - Citysun Holdings- Colombo

யாழ் கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு.வைத்திலிங்கம் சற்குணம் ( சமாதான நீதவான், Chairman Citysun holdings pvt Ltd ) அவர்கள் **30-10-2024** புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பகவதியம்மா, சிவநேசன் அவர்களின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற இராஜலிங்கம், அன்னபூரணம் அவர்களின் அன்பு மருமகனும்,குகனேஸ்வரி (ஜெயம்) அவர்களின் அன்புக்கணவரும், செந்தூரன் (லண்டன்), கீர்த்திகா (அவுஸ்ரேலியா), ஐங்கரன் (கொழும்பு), ஜெயகரன் (YD Construction, கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும், சத்தியஜித், துஷ்யந்தி, மேனகா, கங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், சரண்யன், யுகன், அபிரா, தாமிரா, அக்ஷரா, அஸ்விகன், விதுஷ்னா, கேஸ்வின், ஜானவி, கவிஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல **17/2,** ஸ்டேசன் ரோட், வெள்ளவத்தை இல்லத்தில் **03.11.2024** ஞாயிற்றுக்கிழமை காலை **9.30** மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. **05.11.2024** செவ்வாய்க்கிழமை காலை **9.30** மணியளவில் இல்லத்தில் சமய கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக **11.00** மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**Senthuran - 0779742185 / Keerthika - 0706440016**
**Ayngaran - 0777796732 / Jeyagaran - 0770041314**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வக்கிரபுத்தியுள்ளோரை மக்கள் ஓரங்கட்டுங்கள்




## ரிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.1
அரசியலில் நிலைப்பதற்காக மக்களுக்கு வரும் அபிவிருத்திகளைக் கூட தடைசெய்யும் வக்கிர மனநிலையில் செயற்படுவோர் ஓரங்கட்டப்பட வேண்டும் -இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். மன்னார், தாராபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முன்னாள் எம்.பி.க்கள் 80 பேர் போட்டியிடவில்லை. வெல்லமுடியாது எனக் கருதியே இவர்கள் ஒதுங்கியுள்ளனர். அதேபோன்று, போட்டியிடும் இன்னும் சிலரை மக்கள் இம்முறை தோற்கடிக்கவும் தீர்மானித்துள்ளனர். அரசியலில் நிலைப்பதற்காக வக்கிரபுத்தியுடன் செயற்படுவோரையும் மக்கள் நிராகரிக்கவேண்டும். சிறுபான்மைக் கட்சிகளுக்குள் அதிக பலமுள்ள கட்சியாக எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸே திகழ்கின்றது- என்றார். (ச-56)



தீபாவளித் திருநாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட ஆலயங்களில் நேற்று வியாழக்கிழமை சிறப்பு அபிஷேக, பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-66)

# கேதாரகௌரி விரத பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 1
காளி கோயில் என அழைக்கப்படும் குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் கேதாரகௌரி விரதப் பூர்த்தி வழிபாடு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ச-66)

★★★★★★★

கொழும்பு, நவ. 1
'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை கேதாரகௌரி விரதப் பூர்த்தி வழிபாடுகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. காலை 07.30 மணியளவில் சிறப்பு அபிஷேகம், பூசை, சிவலிங்க அபிஷேகம், திருவிளக்குப் பூசை, வழிபாடு, பிரதட்சண நமஸ்காரம் இடம்பெற்றுத் தொடர்ந்து கௌரிக்காப்பு வழங்கப்படும். (ச-66)

# முட்டை 37 ரூபா

யாழ்ப்பாணம், நவ. 1
முட்டையின் அதிகபட்ச சில்லறை விலையை 37 ரூபாவாக நிலைநிறுத்துவதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மொத்த வியாபாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். வர்த்தக அமைச்சின் செயலாளர் எம்.எம்.நைமுதீனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்காலத்தில் இந்த விலைக்கு மேல் முட்டைகளை விற்பனை செய்யவேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-அ)



# சர்வதேச சதுரங்கம் யாழ்.மாணவி சாதனை

யாழ்ப்பாணம், நவ.1
உலகளாவிய தரவரிசை விரைவு சதுரங்க சுற்றுப்போட்டியில் 7 வயதுப் பிரிவில் இலங்கை சார்பில் போட்டியிட்ட யாழ். இணுவிலைச் சேர்ந்த கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம்-2 இல் கல்வி கற்கும் மாணவி கஜிஷனா நான்காவது இடத்தை தனதாக்கியுள்ளார். உலக சதுரங்க அமைப்பால் வெளியிடப்பட்ட தரவரிசையின் அடிப்படையில் விரைவு சதுரங்கப் போட்டியில் (15நிமிடம்10 நொடி ) ஆயிரத்து 623 புள்ளிகளை பெற்று பல நாடுகளைச் சேர்ந்த 78 போட்டியாளர்களில் 4 ஆம் இடத்தை பெற்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார். (ச-25,113)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.1
சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை 2025 ஆம் கல்வியாண்டில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும் இலவசமாக வழங்கப்படும் எனவும், மேலதிக வகுப்புகள், கணனிக் கற்கைகள், கவின் கலை வகுப்புகள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், சுகாதார, மருத்துவ, விளையாட்டு வசதிகள் என்பனவும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பிள்ளைகளின் பெற்றோர் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ, அல்லது 0212240146 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் எப்பாகத்திலுமிருந்தும் புதிய மாணவர் அனுமதிக்கு விண்ணப்பிக்கமுடியும். விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளைப் பெற்றோர் சந்திப்பதற்கோ அல்லது விடுமுறை நாட்களில் வீடு சென்று வருவதற்கோ அனுமதி வழங்கப்படும். மாதம் ஒரு தடவை பெற்றோருக்கான போக்குவரத்துக் கொடுப்பனவு தூர அடிப்படையில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-66)

# இஸ்ரேல் மீது தாக்குதல்

லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட சரமாரியாக ரொக்கெட் தாக்குதல்களில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் காயமடைந்துள்ளனர். (ம)


## மரண அறிவித்தல்



(CS/56575) J-1

### விஜயகுமார் தமிழ்நிலவன்

தோற்றம் 07.11.1999 மறைவு 29.10.2024

புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயகுமார் தமிழ்நிலவன் கடந்த 29.10.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் விஜயகுமார் - காலஞ்சென்ற கனிமொழி (அமுதா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் அருந்ததி தம்பதியரின் அன்புப் பேரனும், மகிழிசையின் அன்புச் சகோதரனும், பிரபா, காலஞ்சென்ற குபேரன் மற்றும் அருணா ஆகியோரின் அன்பு மருமகனும், மணிமொழி (குமுதா), யசோ, கேதீஸ்வரன், முருகதாஸ் ஆகியோரின் பெறாமகனும், சஞ்சுதா, சஞ்சுதன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், அகரன், ஆதிரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ"

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவசுப்பிரமணியம் கமலாம்பிகை

அருகிருந்து அருமறையாய் ஆசி தந்து காப்பாய்
தருமமுற எமை வளர்த்த தாயே நீ எங்கே?
தாங்காத துயர் கொண்டு தவிக்கின்றோம் இங்கே
உருதந்து உயிர் தந்து ஊக்கமுற வளர்த்து
உன்னை நீ உருக்கியெமை வளர்த்தியே அம்மா!
பெருநிதியும் பேர் புகழும் பெற்றென்ன கண்டோம்
பெற்றெடுத்து பெயர் தந்த பெருந்தகையே நீதான்
அருகில்லை என்றெண்ணி அலைகின்றோம் நாங்கள்
அருகிருந்து அருமறையாய் ஆசி தந்து காப்பாய்!

முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான்உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

குடும்பத்தார்.

(CR/43570) 1-A

# இலங்கை- ரஷ்யா ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், நவ. 1

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையே சுங்க நடவடிக்கைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பீ.பி.எஸ்.நோனிஸ் மற்றும் ரஷ்ய சுங்க சேவையின் பிரதானி வீ.ஐ.பிகலோவில் ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக செயற்பாடுகளின் போது சுங்க நடவடிக்கைகளை விணைத்திறன் மிக்க வகையில்
முன்னெடுக்கும் நோக்கில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பூஸா சிறையில் போதைப்பொருள்

கொழும்பு, நவ. 1

பூஸா சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது போதைப்பொருள் உட்பட பல்வேறு பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே அவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

## INVITATION FOR BIDS (IFB)
## DISTRICT SECRETARIAT - MULLAITIVU.

Balance Work for Construction of Healing Center at Oddusuddan, Mullaitivu.
MU/KAC/PRO/WO-2024/29

1. The Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu on behalf of the Government Agent / District Secretary, Mullaitivu now invites sealed bids from eligible and qualified bidders for Construction work described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a. Bidders shall Registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Buildings construction for grade mentioned in the table below.
4. Qualification requirements are indicated in Section 4 of the Bidding Document. Additional details are provided in the Bidding Data and Contract Data (Section 5)
5. Interested bidders may obtain further information from Accounts Branch, District Secretariat, Mullaitivu and inspect the bidding documents at District Secretariat from 9.00 am to 03.00 pm on working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the District Secretary, Mullaitivu, from 01th November 2024 to 21st November 2024 from 09.00 am to 03.00 pm upon payment of a non-refundable fee of Rs.2000.00 The method of payment will be cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered to Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu on or before 03.00 pm on 22nd November 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid meeting held on 18th November 2024 at 2.00 pm.

| Bid ID | Description of work | Estimated amount (Rs.)(without VAT) Million | Contract Period (Days) | Grade Request | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Security Amount | Validity Period |
| MU/KAC/PRO/WO-2024/29 | Balance Work for Construction of Healing Center at Oddusuddan, Mullaitivu. | 29.26 | 210 | C6 & C5 (Buildings) | 293,000.00 | Till 19.03.2025 |

Chairman,
Departmental Procurement Committee,
District Secretariat,
Mullaitivu.

(CR/43558) J-1

Date: 01.11.2024

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.10.2024 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னமணி மகேந்திரராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.11.2024) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், தொடர்ந்து வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். நாளை மறுதினம் (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **"உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் (வடக்கு வீதி)"** ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இராச வீதி,**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

(CS/56579) J-1

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி விரதம் நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 1

கந்தசஷ்டி திருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறை பார்வதவர்த்தனி சமேத பசுபதீசுவரல் கோவிலில் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற உள்ளன.

கந்தசஷ்டி திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு தினமும் மாலை 2.30 மணிக்கு அபிசேகம் ஆரம்பித்து, மாலை 3.30 மணிக்கு சாயுங்கால பூசை இடம்பெற்று, மாலை 4.15 மணிக்கு வசந்தமண்டப பூசை வழிபாடு நடைபெற்று கந்தசஷ்டி விரதமிருக்கும் அடியவர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கப்பட உள்ளது.

தொடர்ந்து வரும் நவம்பர் 7 ஆம் திகதி கந்தசஷ்டி விரத பூர்த்தியன்று காலை 8.30 மணிக்கு அபிசேகத்துடன் ஆரம்பமாகி மு.ப. 10 மணிக்கு காலை சந்திப்பூசையும், பி.பகல் 3 மணிக்கு சாயங்கால பூசையும், 3.30 மணிக்கு சிவன், அம்பாள் பூசையும் இடம்பெற்று மாலை 4.15 மணிக்கு வசந்த மண்டப பூசையை தொடர்ந்து மாலை 5 மணிக்கு சூரசங்காரம் இடம்பெற உள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு அபிசேகத்துடன் ஆரம்பமாகி காலை 6.15 மணிக்கு பாறணை விசேட பூசை இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்பட உள்ளது. மாலை 4.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம்பெற்று கந்தசஷ்டி திருவிழா நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## 17 தடவை...

பிரதமர் ஹரிணிக்கு அரசமைப்புத் தொடர்பில் தெளிவில்லை. அவருக்கு அரசமைப்புத் தொடர்பான புரிதல் இல்லை. ஆதலால், நான் வேண்டுமானால் அவருக்கு அரசமைப்புத் தொடர்பில் கற்பிக்கின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலடியாகவே, பொதுமக்களால் பலமுறை நிராகரிக்கப்பட்டவரும், தனது தொகுதியில் பலமுறை தோல்வியடைந்தவருமான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங், எனக்கு அரசமைப்புக் குறித்து கற்பிக்க வேண்டுமா? என பிரதமர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலில் 17 முறை தோல்வியடைந்த போதிலும் ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து விடைபெறுவதாக இல்லை. தொடர்ந்தும் பெரும் சுமையாக தனது அரசியல் வாழ்க்கையில் தொங்கிக் கொண்டிருக்கின்றார்.

மக்கள் மாறிவிட்டார்கள் என்பதையோ அல்லது தன்னை நிராகரித்து விட்டார்கள் என்பதையோ அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. பொதுமக்களின் ஆணையே அரசமைப்பின் அடிப்படை. இதனை புரிந்துகொள்ளாத ஒருவர் எனக்கு எப்படி அரசமைப்பு குறித்து கற்பிக்க முடியும்? அரசமைப்பினை நன்கறிந்த ஒருவர் தேர்தல்களை ஒத்திவைக்க மாட்டார். தேசியபேரவைநீதித்துறையின் தீர்மானங்களில் தலையிடமாட்டார். எனக்கு அரசமைப்பைக் கற்பிப்பது என்றால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த அடிப்படைகள் தெரிந்திருக்க வேண்டும் - என்றார். (அ-ம)

## நிலையற்ற...

டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்ததாவது:-

முக்கியத்துவம் மிக்க சர்வதேச மாநாடுகளைப் புறக்கணித்து தற்போதைய அரசாங்கம் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இது சர்வதேசத்தின் மத்தியில் அரசாங்கத்துக்கு மாத்திரமின்றி முழு நாட்டுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் செயல்.

இலங்கையில் இதுவரையில் சிறந்த வெளிநாட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்தன. ஆனால் தற்போது அதில் அதிகளவான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற ஒரு மாதத்துக்குள் மூன்று பிரதான இராஜதந்திர சர்வதேச மாநாடுகள் இடம்பெற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர், பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு, பிரிக்ஸ் மாநாடு என்பவற்றை இந்த அரசாங்கம் புறக்கணித்துள்ளது.

அரசாங்கம் அதன் வெளிவிவகாரக் கொள்கைகளை பலப்படுத்தியிருக்க வேண்டிய சந்தர்ப்பங்களை தவறவிட்டிருக்கிறது. ஜனாதிபதி அல்லது வெளிவிவகாரத்துறை அமைச்சர் பங்கேற்றிருக்க வேண்டிய இந்த மாநாடுகளில் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளரும் தூதுவருமே பங்கேற்றுள்ளனர். இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு விடயமல்ல. இது சர்வதேசத்தின் மத்தியில் அரசாங்கத்துக்கு மாத்திரமின்றி முழு நாட்டுக்கும் அவப் பெயரை ஏற்படுத்தும்.

சர்வதேச ஒத்துழைப்புக்கள் அத்தியாவசியமாகவுள்ள இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான மாநாடுகளை புறக்கணிப்பது தவறானதாகும். வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை இவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை. தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் ஒரு பாதமான பக்கத்தையே இவை காண்பிக்கின்றன. இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் அது பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் - என்றார். (அ-ம)

## பெற்றோல்...

319 ரூபாவாக இருந்த லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 313 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒக்டேன் 95 பெற்றோல் விலை 6 ரூபாவால் குறைந்துள்ளதுடன் அதன் புதிய விலை 371 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை டீசல் ஒரு லீற்றரின் விலையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. அதன் விலை 283 ரூபாவாகும். மண்ணெணெயின் விலையிலும் மாற்றம் ஏற்படவில்லை. அதன் விலை 183 ரூபாவாகவே உள்ளது. (அ-ம)

## கற்கோவளை...

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களில் ஒருவர், 2019ஆம் ஆண்டு குடத்தனையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைகளுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என்று தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

கற்கோவளம் ஜே/406 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்துவந்த மாணிக்கம் சுப்பிரமணியம் (வயது-53) என்ற சலவைத் தொழிலாளியும் அவரது மனைவியான மேரி றீற்றா (வயது-54) என்பவரும் நேற்றுமுன்தினம் சித்திரவதை செய்யப்பட்டு கல்லால் குத்திக் கொல்லப்பட்டிருந்தனர்.

பிரதான சந்தேகநபர்களாக மூவர் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களில் இருவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைது செய்யப்பட்டிருந்தனர். ஒருவர் தலைமறைவாகியிருந்த நிலையில் அவரும் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அதீத குடிவெறி மற்றும் பழிவாங்கும் குரோத உணர்வு என்பவற்றாலேயே இந்தப் படுகொலைகள் இடம்பெற்றுள்ள என்றும் பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-100)

## ஐரோப்பா...

டுள்ளார். கொழும்பில் வசித்துவரும் அந்த நபர், வெளிநாட்டுக்கு அனுப்புவதாக யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு இளைஞர்களை ஏமாற்றி 25 லட்சம் ரூபா வரையில் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். இத தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அந்த நபரை யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுக் கைது செய்தனர். (அ-ம-26)

## வயாவிளான்...

அருகாமையில் உள்ள குறித்த வீதி பல்வேறு கோரிக்கைகளுக்குப் பின்னரும் நீண்டகாலம் மூடப்பட்டிருந்தது. வடமாகாண ஆளுநர் வேதநாயகன் ஜனாதிபதி அநுரவுடனான அண்மைய சந்திப்பின்போது குறித்த வீதியைத் திறந்து வைத்து மக்களின் போக்குவரத்துக்கு வழியேற்படுத்துமாறு கோரியிருந்தார். இந்தக் கோரிக்கைக்கு அமையவே இந்த வீதி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-ம-27)

## விஜயகுமாரதுங்க...

சலுகைகள் மற்றும் பாதுகாப்புகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, விஜய குமாரதுங்க கொலையில் ஜே.வி.பி.க்குத் தொடர்புள்ளதாக ரணில் தெரிவித்துள்ளார்.

ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளையும் பாதுகாப்பையும் அவ்வளவு இலகுவில் விலக்கிக்கொள்ளமுடியாது. சந்திரிகா குமாரதுங்கவின் ஒரு கண் குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. அவருடைய கணவரும் கொல்லப்பட்டார்.

இவ்வாறிருக்கையில் எவ்வாறு சந்திரிகாவின் பாதுகாப்பை விலக்கிக்கொள்ள முடியும்? சந்திரிகா ஒருபோதும் எனக்கு ஆதரவளிக்கவில்லை. அதற்காக அவருடைய சிறப்புரிமைகளை நான் மறுக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது அரசியல் ஆதரவை தற்போது இழந்துள்ளார். அது வேறு விடயம். அதற்காக, அவரது பாதுகாப்பைக் குறைக்க முடியாது. மஹிந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தவர் என்கின்றபோது அவரது பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்தவேண்டும். எனக்கு வழங்கப்பட்ட சலுகைகளை விலக்கிக் கொள்ளுங்கள். ஆனால் ஏனையவர்களுக்கான சலுகைகளையும் பாதுகாப்புகளையும் வழங்குங்கள் - என்றார். (அ-ம)

## பிரச்சினைகளை...

தொடர்பிலும், இலங்கையில் வைத்து இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டுக் கைது செய்யப்படுகின்றமை தொடர்பிலும் நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்காக, இந்திய அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளுக் கும், இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போதே, இந்திய இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்வது என்று இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

மீனவர்களுக்குக் காயம் ஏற்படுத்துதல், உயிரிழப்புகளுக்கு வழிவகுத்தல் உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கையிலும் இலங்கைக் கடற்படையினர் ஈடுபடக்கூடாது. எந்த சூழ்நிலையிலும் ஆயுத பலத்தைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இலங்கைச் சிறைகளில் உள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று இந்தியத் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பரிசீலிப்பதாக இலங்கையின் பிரதிநிதிகள் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## காற்று...

எதிர்வரும் 6ஆம் திகதி அல்லது 7ஆம் திகதியன்று இலங்கைக்குக் கிழக்காக இந்தக் காற்றுச் சுழற்சி உருவாகவுள்ளது. இதனால், எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதேவேளை நவம்பர் மாதத்தில் மூன்று தாழமுக்கங்கள் உருவாக வாய்ப்புள்ளது - என்றார். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 02 . 1951



மறைவு 31 . 10 . 2024

## கணபதிப்பிள்ளை முருகேசு

**(ஓய்வுபெற்ற சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்)**

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல - 876 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியினை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை முருகேசு (ஓய்வுபெற்ற சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்) நேற்று (31.10.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், அனுஷாந்தினி (யாழ்ப்பாணம்), சுதர்சன் (லண்டன்), இரதிதேவி (நிஷா - வெளிக்கள உத்தியோகத்தர், பளை பிரதேச செயலகம்), சுரேந்திரன் (நேரக்கண்காணிப்பாளர் - தனியார் போக்குவரத்துச் சேவை, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்குமார் (உரிமையாளர் - நியூ சண்முகா ஜுவலரி, யாழ்ப்பாணம்), சுபாஜினி (லண்டன்), சுமித்திகா (இரத்தினபுரம்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கனகரத்தினம், சோமசுந்தரம் மற்றும் பொன்னம்மா (வட்டக்கச்சி), நாகலிங்கம் (மீசாலை), பொன்னுத்துரை (கனடா), கமலமலர் (மிருசுவில்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வேலாயுதம், யோகேஸ்வரி மற்றும் இ.இராஜேஸ்வரி (கைதடி), சு.கருணாநிதி (ஹட்சன் வீதி), ச.குணேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ச.துசிதா, ச.துசான், சு.ஆரவி, சு.கேனுஷி, சு.கேசகி, சு.சைரகி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (01.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல - 876 ஆறுமுகம் வீதி,**
**வட்டக்கச்சி.**

(CS/1754) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த
# உயர்தர மாணவர்களுக்கு 20,000 ரூபா புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், நவ.க

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத் தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா புலமைப் பரிசில்கள் வழங்க நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள், ஜீவனோபாயமாக விவசாயத்தை மேற்கொள்ளும் குடும் பத்தைச் சேர்ந்தவராகவும், பெற்றோரில் ஒருவராவது யாழ். மாவட்டத்திலுள்ள ஏதாவதொரு கமக்கார அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல் வேண் டும். 2022, 2023, 2024 ஆண்டுக ளில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து முறையே 2024, 2025, 2026 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சை எழு தும் மாணவராக இருத்தல்வேண் டும். அதன் பிரகாரம், விண்ணப்பதா ரிகள் தமக்குரிய கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, தங்களது பிரிவுக்குப் பொறுப் பான கிராம உத்தியோகத்தர் மற்றும் தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபர் ஆகியோரின் சிபாரிசுடன் பூரணப் படுத் தப்பட்ட விண்ணப்பத்தை 2024.11.22 ஆம் திகதிக்கு முன்பு உரிய உத்தியோ கத்தரிடம் கமநல சேவைகள் நிலையத் துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கையளிக்கலாம். க. பொ.த சாதாரண தரத்தில் விண்ணப் தாரியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறு மற்றும் குடும்பவருமானம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக் கப்பட்டு கமநல சேவைகள் நிலையப் பிரிவு மட்டத்தில் தெரிவு இடம்பெறும் என யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (25)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L
V2 Travels
0768226244

# பகல் கனவு பலிக்காது!
## ரணிலுக்கு விஜித சாட்டை

கொழும்பு, நவ.1

இந்த ஆட்சி மூன்று மாதங்களுக்குள் கவிழும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு கண்டுகொண்டி ருக்கின்றார். அது ஒருபோதும் பலிக்காது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்டப்பூர்வமாக வழங்கப்பட வேண்டிய வரப்பிரசாதங்கள், பாதுகாப்பு எல்லாம் வழங்கப்பட் டுள்ளன. அளவுக்கு அதிகமாக எதையும் வழங்கவேண்டிய தில்லை. 180 இராணுவத்தினர், படையினர் எல்லாம் எதற்கு? தேவையற்ற விடயங்களை வழங்கவேண்டியதில்லை. இந்த அரசாங்கத்தால் பயணிக்க முடியாது என ரணில் விக்கிர ம சிங்க பகல் கனவு காண்கின்றார். இதற்கு முன்னரும் அவர் கனவு கண்டார். கனவு காணும் உரிமை அவருக்கு உள்ளது. நன்றாக கனவு காணட்டும்.

எதிர்க்கட்சித் தலைவரும் நகைச்சுவைத்தனமான கருத்துகளை கூறிவருகின் றார். அவரின் கருத்துகளை மக்கள் ஏற்கமாட்டார் கள் - என்றார். (ச-இ)

# மரண தண்டனை

அம்பாந்தோட்டை, மித்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிப் பிட்டிய பிரதேசத்தில் மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த கணவருக்கு மரண தண் டனை விதித்து தங்காலை மேல் நீதிமன்றம் தீர்ப்பு ளித்துள்ளது.

இந்த கொலை சம்பவம் 1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர் 39 வயதுடைய மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் மித்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டி ருந்தார். (ச)




## 100 கோடி பெறுமதியான
# ஹெரோய்ன் மீட்பு

கொழும்பு, நவ. 1

செவனகல பிரதேசத்தில் 40 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. விசேட அதிரடிப்படை யினர் நடத்திய சோதனை நடவடிக்கையின் போதே போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இதன் மதிப்பு சுமார் 100 கோடி ரூபாய் எனக் கூறப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள் ளனர். (ச-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org